பஸ் வசதி இல்லாத கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் Mini Bus வசதி செய்துதர மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத கேள்வியைக் கேட்டிருக்கிறார். இதுகுறித்து அவர் தனியாக வினா போட்டால், தகுந்த பதில் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

கால்நடை மருத்துவமனை

***1182 திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2016 ஆகஸ்ட் 30]

ராதாபுரம் தொகுதியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, ராதாபுரம் தொகுதி, கூடங்குளம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனையை நேரடியாக அமைக்க இயலாது. ஒரு பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்றால், கால்நடைகளின் அலகு 3,000-க்குமேல் இருப்பின், முதலில் கால்நடைக் கிளை நிலையம்தான் ஆரம்பிக்கப்படுகிறது. 5,000-க்குமேல் கால்நடை அலகுகள் இருப்பின், கால்நடைக் கிளை நிலையத்தை தகுதியின் அடிப்படையில் கால்நடை மருந்தகமாகவும், பின்னர் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படும்.

ராதாபுரம் தொகுதியில், கூடங்குளம் ஊராட்சிப் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க, அப்பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை 1,390 உள்ளதால், அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றார் வள்ளலார். அந்தவகையிலே, தமிழகத்திலே பயிர்கள் வாடுகிறபோது, காவேரியாக இருந்தாலும், முல்லைப் பெரியாறாக இருந்தாலும் போராடி வெற்றிகளைக் குவிக்கின்ற வெற்றித் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'வாழும் மனிதர்கெல்லாம் சோறிடல் வேண்டும்' என்றான் பாரதி. அந்தவகையிலே, மாநிலத்திலே இருக்கிற மக்கள் ஒருவருக்கும் பசியே இருக்கக்கூடாது என்பதற்காக, 20 கிலோ அரிசியை, அதுவும் விலையில்லாமல் தருகிற (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அருளரசி மாண்புமிகு அம்மா அவர்கள். மனிதர்கள்தான் என்று இல்லை. கால்நடைகள் என்றாலும் கருணை காட்டுபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எப்படியென்றால், கடந்த 2012 ஆம் ஆண்டு கோவை மற்றும்*

ஈரோடு மாவட்டங்களில் ஈமு கோழிப் பண்ணைகள் குறித்த பிரச்சினை எழுந்தபோது, அந்த ஈமு கோழிப் பண்ணை முதலீட்டாளர்கள்மீது நடவடிக்கை வந்தபோது, ஈமு கோழிகளெல்லாம் தீவனங்கள் இல்லாமல் வாடி இறக்கின்ற நிலைமை வந்தபோது, ஓர் அரசாணையைப் பிறப்பித்து 1 கோடி ரூபாய் தீவனத்திற்காக, ஈமு கோழிகளுக்கு வழங்கிய ஈர இருதயம் படைத்த, ஈரிலைத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட கூடங்குளம் மற்றும் கண்ணநல்லூர் பகுதியிலே இருக்கிற கால்நடைகளைப் பராமரிப்பதற்கு, அந்தப் பகுதியில் உள்ள மக்கள் அருகிலுள்ள மற்ற கால்நடை மருத்துவமனைகளுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. ஆகையால், அந்தப் பகுதியிலே கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கேட்டேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஈர இருதயம் படைத்தவர்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய மக்களின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றால், அதை மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்ற எதிர்பார்ப்போடு கேட்கிறேன். ஏனென்றால், வரம் கேட்பவர்கள் கேட்டால்தான் கிடைக்கும். ஆனால், கேட்பதற்கு முன்பே தருபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ற வகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதி மக்களுடைய இந்தக் குரலை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி அமைகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள ராதாபுரம்,

2016 ஆகஸ்ட் 30]

திசையன்விளை, திருவம்பலபுரம், டி. கள்ளிகுளம், செட்டிகுளம், பணகுடி, சமூகரங்கபுரம் ஆகிய பஞ்சாயத்துகளைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல், அந்த இடத்தில் அலகுகள் அதிகமாகும்பட்சத்தில், தேவை ஏற்படும்போது, கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மருத்துவமனை ஏற்படுத்தித் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

சிறுவாணி ஆற்றின் குறுக்கே அட்டப்பாடியில் கேரள அரசு அணை கட்ட முயற்சி மற்றும் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடக் கோரி நடைபெறும் போராட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களில் யாராவது ஒருவர் கேளுங்கள். யார் கேட்கின்றீர்கள்? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவாணி ஆற்றின் குறுக்கே, கேரள அரசு புதிய அணை கட்டக்கூடிய ஒரு முயற்சியை எடுத்து வரக்கூடிய நிலையில், இதனால் தமிழக விவசாயிகள் மட்டுமல்லாமல், குறிப்பாக, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு போன்ற பல்வேறு மாவட்ட மக்களுக்கும் கவலை அளிக்கக்கூடிய வகையில் இந்த நிலை உருவாகியிருக்கின்றது. இது கேரள அரசினுடைய புதிய முயற்சி என்றாலும், தொடர்ந்து கேரள அரசு இந்தத் திட்டத்தை முயற்சி செய்து கொண்டு இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே தமிழர்களுடைய நலன் பற்றி அம்மாநில